**மெதிரிகிரிய பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 09 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுலை 12 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மெதிரிகிரிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(i) மீளாய்வாண்டு நவம்பர் திசெம்பர் மாதங்களுக்கான முத்திரைக் கட்டண வருமானக் கூட்டுத்தொகை ரூபா 174,000 இனை நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தியிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டு திசெம்பர் மாதத்திற்கான நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 759,464 தொகையினை நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தியிருக்கவில்லை.

(iii) நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள 86 காணி விடயங்கள் மற்றும் 60 கட்டிட விடயங்களின் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து அப் பெறுமதிகளைக் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(iv) ரூபா 117,927 இற்கான நிர்மாண வேலைக் கடன்பட்டோர் மீதியொன்று மற்றும் அப் பெறுமதிக்கு சமமான நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதியொன்றும் கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) கடை வாடகை, குத்தகை மற்றும் வாராந்த சந்தை வாடகை என பெற வேண்டிய கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 382,412 தொகை நீண்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டதுடன் அதனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2014 ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 1,265,025 தொகையான நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்வதற்காக 2016 ஏப்ரல் மாதம் வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை | |
| (i) | விதி 67 | வர்த்தக நிலையங்கள் மற்றும் தொழிற்சாலைகள் பற்றிய வருடாந்த கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | விதி 203, 214 மற்றும் 218 | சபையின் ஆதனங்கள் தொடர்பாக பூரணமாக கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2002 நவம்பர் 28 திகதிய ஐஏஐ/2002/02 கொண்ட திறைசேரிச் செயலாளரின் சுற்றறிக்கை | கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருள்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,942,753 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,040,603 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 14,296,553 தொகையான தண்டப் பணம், ரூபா 2,594,969 தொகையான வீத வரி, ரூபா 665,544 தொகையான ஏனைய வருமானங்கள் மற்றும் ரூபா 192,527 தொகையான வாடகையினை பல வருட காலமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கடை வாடகை தொடர்பாக ஆண்டிற்கான சிட்டையிடப்பட்டவை வாடகை அதில் அறவிடப்பட்ட தொகை அதற்கான பற்றுச்சீட்டு இலக்கம் வாடகையாளரின் பெயர் என்பன விபரங்களை தெளிவாக குறிப்பிட்டு கடை வாடகை பதிவேடு முறையாக நடத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் கடைகளுக்காக அறவிடப்படும் பிணைப்பணம் தனியாக பிணை வைப்புப் பதிவேடு ஒன்றில் பதிவு செய்யப்பட வேண்டும். எனினும் பொதுவான பிணை வைப்புப் பதிவேட்டில் இனங்காண முடியாதவாறு பதிவு செய்யப்பட்டிருந்தது.

(இ) ரூபா 226,281 இற்கான நிலுவை வருமானம் ஒன்று 1994 ஆண்டு முதல் கணக்குகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்து வெளிப்படுத்தப்பட்டிருந்துடன், அப் பணத்தை அறவீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஈ) வர்த்தக அனுமதிப்பத்திரம் வழங்கும் போது அவ் வியாபாரத்தின் உரிமையாளர் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளனரா என பரிசோதிக்க வேண்டும். எனினும் அவ்வாறு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாத 19 வர்த்தக நிலையங்களுக்காக மீளாய்வாண்டில் வர்த்தக அனுமதிப்பத்திரம் வழங்கியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

(அ) 2015 ஆண்டு நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்கள் தொடர்பாக கடை வாடகைப் பதிவேடு நாளது வரை பேணப்படாமையால் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகைத் தொகை எவ்வளவு என 2016 ஏப்ரல் மாதம் வரையும் இனங்கண்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான திவுலங்கடவல வாராந்த சந்தையில் வாடகைக்கு கொடுத்துள்ள 05 கடைகள், தியஸென்புர கடை ஒன்று மற்றும் மெதிரிகிரிய வாராந்த சந்தையில் 02 கடைகள் ஆக வாடகைக்கு கொடுத்திருந்த கடைகள் தொடர்பாக உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் 2014 ஆண்டின் போது சபையின் மந்திரிமாரினால் வாடகை அடிப்படையில் பெற்றிருந்ததுடன் அது தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 454,480 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஈ) சபைக்குச் சொந்தமான மூன்று நூலகங்களில் கூட்டுத்தொகை ரூபா 114,320 தொகை பெறுமதியான 613 புத்தகங்கள் மற்றும் பெறுமதியினை இனங்காண முடியாத 49 புத்தகங்கள் காணாமல் போயிருந்ததுடன், அது தொடர்பாக விசாரணை மேற்கொண்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வீத வரி செலுத்தும் மக்களுக்கு நீர் வசதிகள் வழங்கள், பாதைகளை பராமரித்தல், குப்பைகளை சேகரிக்கும் முறையான செயற்பாடு ஒன்றினை தயாரித்தல், வீதி விளக்குகள் பராமரித்தல், சிறுவர் பூங்கா, முன்பள்ளி வசதிகள் வழங்குதல், பொது மலசலகூட வசதிகள் மற்றும் நூலக வசதிகளை வழங்குதல் என்பன திருப்திகரமாக நடைபெற்றிருக்கவில்லை என வீதவரி தொடர்பாக பொது மக்களின் வேண்டுகோள் கடிதங்களை பரிசோதனை செய்த போது வெளிப்படுத்தப்பட்டதுடன் அவ் வசதிகளை நிறைவேற்றுவதற்காக உரிய செயல்நடவடிக்கைத் திட்டமென்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் தேவையான செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.3 தாமதமாகிய செயற்திட்டங்கள்

மாகாண சபையின் அபிவிருத்தி செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக நிதி ஏற்பாடுகள் வழங்கள் 2015 நவம்பர் 23 திகதி முதல் 2016 ஜனவரி வரை காலப்பகுதியில் நடைபெற்றிருந்ததுடன் நிதி ஏற்பாடுகள் கிடைப்பதில் தாமதம் மற்றும் நலன்பெறுவோரை இனங்காணாமை, மதிப்பீடுகள் போதியளவினதாக காணப்படாமை, நலன்கள் வழங்குவதற்கு உரிய நாட்கள் தீர்மானிக்கப்படாமை ஆகிய காரணங்களினால் 2016 ஜனவரி 14 ஆந் திகதி அளவில் ரூபா 1,660,000 இற்கான செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்களில் ரூபா 550,000 தொகைக்கான பிரத்தியேக தன்மையிலான செயற்திட்டங்களும் அங்கீகரிக்கப்பட்டிருந்தன என கோவைகள் மீது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நீண்டகால தூரநோக்குடன் பிரதேச சபை சட்டத்தில் குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களை அடையும் இலக்காகக் கொண்ட செயற்பாடுகளை அடக்கிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று மீளாய்வாண்டிற்காக தயாரித்திருக்கவில்லை.

### 4.2 உள்ளக் கணக்காய்வு

வட மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2015 மார்ச் 18 ஆந் திகதிய இலக்கம் 04/2015 கொண்ட சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் சபைக்கு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

அரிசி மா தயாரிப்பு நிலைய உபகரணத் தொகுதியைச் சேர்ந்த 22 விடயங்களும் பொருட்பதிவேட்டில் பதியப்படாத உடற்பயிற்சி உபகரணத் தொகுதி மற்றும் கிராமங்களிடையே நிகழ்ச்சித் திட்டத்திற்கு உரிய அலுவலக தளபாடங்கள் உபகரண விடயங்கள் 24, இன்டலொக் கொங்கிரீட் கற்கள் 3500 இருப்பு என்பன விளைவற்ற சொத்துக்கள் என பிரதேச சபை வளவில் உள்ளன என அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்